**50. அரிச்சந்திரன் கதை (2)**

உண்மைக்குப் புகழ் பெற்றவனாகிய அரிச்சந்திரன் பெருஞ்சிறப்போடு அரசாட்சியைஇனிது நடத்திக் கொண் டிருந்தான்.விசுவாமித்திரர் அரிச்சந்திரனைப் பொய்யனாக்க எண்ணினார். வேள்விக்குப் பொருள்



வேண்டுமென்று தூது வர் சிலரை அனுப்பினார். பொருளின் அளவை உணர்ந்துகொள்ளாமலே அரிச்சந்திரன் தருவதாகக் கூறினான். பிறகு விசுவாமித்திரர் நாடு நகரம் முதலிய எல்லாவற்றையுஞ் சூழ்ச்சியாகப் பெற்றார். அரிச்சந்திரன் முனிவர் கேட் வைகளையெல்லாம் யாதும் ஆராயாமலே அவருக்குவழங்கியமையால் மனைவி மக்களை விற்றதுடன் தானுஞ் சுடலை காத்துத் துன்புற்றான். "வளவனாயினும்அளவறிந் தழித்துண்" என்பதற்கு ஏற்ப நடந்து கொள்ளாது மனம் போனவாறு பொருளினைச் செலவிடுவோரும்நன்கொடை யளிப்போரும் இறுதியில் துன்புறுவர் என்பதற்கு அரிச்சந் திரன் தக்க எடுத்துக் காட்டாகஅமைந்தான்.

(அரிச்சந்திர புராணம்)

[அளவறிந்தீதல்]